30th April 1959]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்பொழுது திருநெல்வேலி டிஸ்ட்ரிக்ட் போர்டு ஸ்பெஷல் ஆபீசருக்கு உத்திரவு கொடுத்திருக்கிறது. முன்னால் அந்த வேலை நிறுத்தப்பட்டிருந்தது. அந்த வேலையை திரும்ப எடுத்து நடத்துவதற்காக அரசாங்கம் உத்திரவு கொடுத்திருக்கிறது. ஆகையால், அந்த வேலை வெகு சீக்கிரம் நடக்குமென்று நம்புகிறேன்.

SRI V. SUBBIAH : திருநெல்வேலி ஜில்லாவில் ரோடுகள் பல வருஷ காலமாக மெயின்டினென்ஸ் செய்யப்படாமல் இருக்கின்றன. பல தடவை சட்ட மன்றத்திலே இது பற்றிச் சொல்லியிருந்தும் இதுவரையில் எந்தவித நிவர்த்தியும் இல்லாத நிலைமையில் இருக்கிறது. இப்பொழுது கொடுக்கப்பட்ட பணம் அதற்காகச் செலவழிக்கப்படவில்லை. அரசாங்கம் எடுத்துக்கொண்ட ரோடுகள் போக மற்ற ரோடுகளின் கதி என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இந்த ரோடுகளுக்காக பணம் கொடுத்து, அந்த வேலை நடக்கவில்லை என்று தோன்றவில்லை. அங்கு கூடுதலாக ஏழு லட்சம் ரூபாய்க்கு வேலை செய்தும் அந்த ரூபாயைக்கூட கொடுக்க முடியாத நிலைமை இருந்ததால்தான் அந்த வேலை தடைப்பட்டது. இப்பொழுது திரும்ப கவனித்து எதற்காக உத்திரவு பிறப்பிக்கப்பட்டதோ, அந்தப் பண வசதி வந்தவுடன் டிவிஷனல் இன்ஜினீர் அந்த வேலையை எடுப்பார்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : கொடுக்கப்பட்ட பணம் பழைய வேலைக்காகக் கொடுக்கும்படி உத்திரவு கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. இப்பொழுது வேலையே நடக்கவில்லை. டிஸ்ட்ரிக்ட் போர்டு வேலை என்றால் டெண்டர் விடுவதற்கு வழியில்லை. ஆகையால், பணத்தைக் கொடுத்து ஆரம்பிப்பதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : முன்னாடியாக சர்க்காரே எல்லாம் நடத்திக் கொடுப்பது அவ்வளவு சரியாக இருக்கும் என்று தெரியவில்லை. எவ்வளவு உதவி கொடுக்க முடியுமோ அந்த உதவியைக் கொடுத்து நடத்தலாம்.

Upper Division Clerks in the Secretariat

* 268 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to extend the one unit scheme in the matter of promotion of Upper Division Clerks as Superintendents in the Secretariat ; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There is no such proposal at present before the Government. But the matter was examined in detail in 1957, and the proposal dropped for administrative reasons.

(*b*) The one unit scheme has not been extended to cases of promotion of Upper Division Clerks as Superintendents, because after detailed consideration, it was felt that this would lead to a deterioration in the standards of efficiency in administration.